# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 129/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-3/PW- 3 | Village: | |
| Name | : வென்னிஷ் | Age | : 25 |
| Father's/Husband's Name | : வினோத் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 16/08/2023**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திரு.வினோத் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள். 4 ம் எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது நரசிங்கன்பேட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் பள்ளியில் ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா ஆவார். அ.சா.2 எனது அப்பா ஆவார். ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி மேகநாதனை எனக்கு தெரியும். கடந்த 06/09/2020 ம் தேதி மாலை சுமார் 05.00 மணியளவில் நானும், எனது அம்மா, அப்பா மற்றும் தம்பி ஆகியோர் வீட்டில் இருந்தோம். அப்போது எதிரி சிலம்பரசன் குடிபோதையில் வெறும் ஜட்டியுடன் எங்கள் வீட்டிற்கு வந்து எனது அம்மா மற்றும் அப்பாவை பார்த்து குச்சிக்காரி , தேவடியா என அசிங்கமாக திட்டிக்கொண்டிருந்தார். அப்போது கவியரசன், தென்னரசன், மேகநாதன் ஆகியோரும் அங்கு வந்து எனது பெற்றோரை அசிங்கமாக திட்டிக்கொண்டிருந்தார்கள். சிலம்பரசன் எனது அம்மாவை

கையால் அடித்தார். சிலம்பரசன், தென்னரசன் ஆகியோர் எனது அப்பாவை அடித்ததார்கள்.எனது அப்பாவின் வலது கை நடு விரல் முறிந்துவிட்டது. கூட்டத்தில் யார் எனது அப்பாவின் விரலை முறித்தார்கள் என்று தெரியவில்லை. எனது அம்மாவை சிலம்பரசன் தலைமுடியை பிடித்து இழுத்து, வயிற்றிலும், நெஞ்சிலும் மிதித்ததால் எனது அம்மா மயக்கம் ஆகிவிட்டார். எனது அம்மாவிற்கு ஏற்பட்ட காயத்திற்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். எனது அம்மாவை சிலம்பரசன் தலைமுடியை பிடித்து இழுத்ததால் அவரது இடது பக்க காதில் வீக்கம் ஏற்பட்டது. அதற்காக அவருக்கு மருத்துவமனையில் நுண்கதிர் படம் எடுக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. எனது அம்மா 20 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 129/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-2/PW- 2 | Village: | |
| Name | : செந்தில்குமார் | Age | : 45 |
| Father's/Husband's Name | : தனபால் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 16/08/2023**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திரு.வினோத் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள். 4 ம் எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது நரசிங்கன்பேட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி மேகநாதனை எனக்கு தெரியும். கடந்த 2020 ம் வருடம் ஒருநாள் மாலை சுமார் 5.00 மணியளவில் நானும், எனது மனைவியும் எனது வீட்டு வாசலில் உட்கார்ந்து டீ சாப்பிட்டு கொண்டிருந்தோம். அப்போது சிலம்பரசன் எனது வீட்டு வாசலில் அவரது வண்டியை நிறுத்திவிட்டு டிராயருடன் வந்து குச்சிக்காரி, தேவடியா மகனே உன்னை அறுத்து கோர்த்துவிடுவேன் என்று கொச்சையான வார்த்தைகளால் அசிங்கமாக எங்களை பார்த்து திட்டினார். நான் ஏன் அவ்வாறு திட்டுகிறாய் என்று கேட்டேன். பேசிக்கொண்டிருந்தபோதே எதிரி சிலம்பரசன் என்னை அடித்து எனது வலது கை

நடுவிரலை பிடித்து முறித்துவிட்டார். (சாட்சி தனக்கு மேற்படி எதிரியால் ஏற்பட்ட வலது கை நடுவிரலில் ஏற்பட்ட காயத்தை அடையாளம் காட்டுகிறார்.) அதனால் எனது வலது கை நடு விரலின் நுனி தற்போது வரை மடக்க முடியவில்லை. அதனை கேட்ட எனது மனைவியை எதிரிகள் சிலம்பரசன் மற்றும் கவியரசன் கையால் அடித்தார்கள். எதிரி சிலம்பரசன் எங்களை மீறி இந்த ஊரில் எப்படி வாழ்ந்து விடுகிறீர்கள் என்று பார்ப்போம். என்று எங்களை பார்த்து மிரட்டல் விடுத்தார். எனது மனைவிக்கு ஏற்பட்ட காயத்திற்காக 19 நாட்கள் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 129/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-1/PW-1 | Village: | |
| Name | : உமா | Age | : 43 |
| Father's/Husband's Name | : செந்தில்குமார் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 16/08/2023**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திரு.வினோத் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள். 4 ம் எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது நரசிங்கன்பேட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி மேகநாதனை எனக்கு தெரியும். கடந்த 06/09/2020 ம் தேதி மாலை 05.00 மணியளவில் நானும், எனது கணவர் செந்தில்குமாரும் எனது வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தோம். அப்போது எதிரி சிலம்பரசன் ஜட்டியுடன் அங்கு வந்து நின்று கொண்டு குச்சிக்காரி, தேவடியா என மானபங்கப்படுத்தும் வகையில் எங்களை பார்த்து அசிங்கமாக திட்டி, என்னை கீழே இழுத்து போட்டு வயிறு மற்றும்நெஞ்சில் அடித்து உதைத்தார்கள். அதை கேட்ட எனது கணவரையும் எதிரிகள் சிலம்பரசன், கவியரசன், தென்னரசன் ஆகியோர் அடித்தார்கள். எதிரிகள் சிலம்பரசன், தென்னரசன் ஆகியோர் எங்களை மீறி இந்த ஊரில் எப்படி

வாழ்ந்து விடுகிறீர்கள் என்று பார்ப்போம். உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள். அடிபட்ட என்னை 108 ஆம்புலன்ஸ் மூலமாக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். எதிரி சிலம்பரசன் என்னை முகத்தில் அடித்து கீழே தள்ளியதில் எனது இடது பக்க முகம் முழுவதும் வீக்கமாகி வலி ஏற்பட்டது. அதனால் மருத்துவமனையில் 15 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். மருத்துவர்கள் இடது பக்க மூக்கின் மேல் நரம்பு கட் ஆகிவிட்டதாக கூறி சிகிச்சை அளித்தார்கள். அந்த காயத்தினால் அப்போது என்னால் மூக்கு சிந்தகூட இயலாமல் இருந்தது. தற்போது வரை எனது இடது பக்க தலை மற்றும் முகத்தில் அந்த வலி இருந்து வருகிறது. மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் வந்து விசாரித்தார்கள். நான் நடந்த சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். (**புகார் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**